[1973 நவம்பர் 28

வேண்டுமென்றே அதற்கு ஸ்கேர்ஸிடி ஏற்படுத்தி அதிக விலைக்கு விற்கப்படுகிறது. ஆகவே, சர்க்காரே ப்ரின்ட் செய்து அதை விற்பதற்கு ஏற்பாடு செய்தால் அதிக லாபம் வருமே, அதை என் சர்க்கார் செய்யவில்லை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போது ஒன்றாவது வகுப்பில் இருந்து 11 ஆவது வகுப்பு வரையில் உள்ள பாடப் புத்தகங்கள் எல்லாவற்றையும், சிறப்புப் பாடங்கள் தவிர மற்றப் பாடப் புத்தகங்களையெல்லாம் தமிழக அரசுதான் வெளியிடுகிறது. தமிழ்நாடு பாட நூல் வெளியீடு நிறுவனம்தான் வெளியிட்டு வருகிறது. நாம் எவ்வளவு குறைந்த விலைக்குக் கொடுக்க முடியுமோ அவ்வளவு குறைந்த விலைக்கு கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

**திரு. ஆ. பாந்தாமன் :** கல்லூரிகளுக்கான விஞ்ஞான பாட நூல்களின் விலை அதிகமாக இருக்கிறது. பெரும்பாலும் அந்தப் புத்தகங்கள் வெளிநாட்டு விஞ்ஞானிகளால் எழுதப்பட்ட நூல்களாகும். அவற்றின் விலையைக் குறைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பொதுப் படையாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். எந்த ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டாலும் விலை குறைவாகத் தான் இருக்கும். அதே அளவிலுள்ள மேல் நாட்டுப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் ரூ. 20, 25, 30, 35 என்றாகிறது ஆனால் நம் நாட்டில் பார்த்தால் ரூ. 3, 3-50-க்கு மேல் போகாத அளவிற்கு இந்த நூல்களை வெளியிட்டுக் கொண்டு வருகிறார்கள்.

### *Experts in Telugu language in Text Book Committee*

THIRU D. S. A. SIVAPRAKASAM Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Education Department has included experts in Telugu language in the Text Book Committee of the State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) செல்வி ஒய். சரோஜினிதேவி, முதல்வர், அரசினர் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர், செல்வி பி. ஹேமாவதி, ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியை, கல்யாணம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி,

சென்னை-2, ஆகிய இருவரும் பாட நூல் குழுவில் தெலுங்கு மொழி வல்லுநர்களாக உள்ளனர்.

**திரு. கே. எ. வகாப் :** இந்த பாட நூல் குழுவில் ஒவ்வொரு மைனாரிட்டி மொழிகளுக்கும் அங்கம் கொடுக்கப்படுகிறதா? உருது மொழி போன்றவற்றிற்கும் அப்படி இடம் அளிக்கப்படுகிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

*Sale of "Bazaar Notes"*

* 453 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether the Seminar on Nationalisation of Text Books conducted by the Tamil Nadu Text Book Society has recommended to the Government to ban "Bazaar Notes" during January 1973; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(ஆ) இந்தக் கருத்தரங்கில் அங்காடி குறிப்புகள் ("Bazaar Notes) அச்சிடப்பட்டு விற்பனை செய்வதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும், இந்தக் குறிப்புகளை உபயோகிப்பதால் ஏற்படும் கெடுதல்களை வலியுறுத்தப் பாட நூல் நிறுவனத்தின் அங்கங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. கொள்கையளவில் அரசுக்கு இக்கருத்து உடன்பாடானதே. நடைமுறையில் இதை எவ்வாறு செயல் படுத்துவது என்பது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

*Thiruvanmiyur as tourist centre*

* 454 Q.—THIRU N. DENNIS : : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the steps taken to promote the beach at Thiruvanmiyur near Madras as a Centre of Tourist Traffic?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை.